**முதலாந் தொகுதி - பாடல்கள் - 2562**

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் பிரபந்தங்கள் (5) | 228 |
| 2. | ஞாயிறு ஆயிரம் | 1100 |
| 3. | விநாயகர் பிரபந்தங்கள் (6) | 234 |
| 4. | கணபதி ஆயிரம் | 1000 |

**இரண்டாந் தொகுதி - பாடல்கள் - 2976**

| | | |
|---|---|---|
| 1. | சிவன் பிரபந்தங்கள் (6) | 543 |
| 2. | சிவன் ஆயிரம் | 1000 |
| 3. | சக்தி பிரபந்தங்கள் (18) | 433 |
| 4. | அம்பிகை ஆயிரம் | 1000 |

**மூன்றாந் தொகுதி (படைவீடுகள்-1) பாடல்கள்-2868**

| | | |
|---|---|---|
| 1. | படைவீட்டுத் திருப்புகழ் (38) | 4 |
| 2. | படைவீட்டுத் திருப்பதிகம் பலைமலைகாரன் பதிகம் | 13 |
| 3. | கௌமாரர் பன்னிய பதிகம் | 13 |
| 4. | திருச்செந்தூர் | 1838 |
| 5. | முருகன் ஆயிரம் | 1000 |

**நான்காந் தொகுதி (படைவீடுகள்-2) பாடல்கள்-3035**

| | | |
|---|---|---|
| 1. | திருப்பரங்குன்றம் முதல் நட்சத்திர மலை வரை | 2313 |
| 2. | முருகன் பதிக வருஷம் | 722 |

**ஐந்தாம் தொகுதி (படைவீடுகள் கடை பாகம்) பாடல்கள் - 2700**

| | | |
|---|---|---|
| 1. | அருணாசலம் முதல் கந்தமாதன கிரி வரை) | 1576 |
| 2. | அருணகிரிநாதர் புராணம் | 441 |
| 3. | முருகன் துதி நூல்கள் (8) | 683 |

**ஆறாந் தொகுதி - பாடல்கள் - 2642**

| | | |
|---|---|---|
| 1. | சமயாதீத பிரபந்தங்கள் (5) | 511 |
| 2. | சமயாதீத ஆயிரம் | 1000 |
| 3. | திருவருள் நாட்டம் | 1020 |
| 4. | வண்ணத்தியல்பு | 111 |

**ஏழாந் தொகுதி - பாடல்கள் - 2546**

| | | |
|---|---|---|
| 1. | திருமால் பிரபந்தங்கள் (7) | 356 |
| 2. | திருமால் ஆயிரம் (ஏழாயிரம் பிரபந்தம் நிறைவு) | 1000 |
| 3. | திருவரங்கத் திருவாயிரம் | 1190 |

**எட்டாந் தொகுதி - பாடல்கள் - 2427**

| | | |
|---|---|---|
| 1. | தொண்டைநாட்டு எண் திருத்தலங்கள் (35-58) 1404 | |
| 2. | சமரச நூல்கள் பதிகங்கள் (14) | 670 |
| 3. | முருகன் பதிகங்கள் (22) | 286 |
| 4. | முருகன் துதி பாக்கள் (11) | 67 |

**ஒன்பதாந் தொகுதி- பாடல்கள் - 2700**

| | | |
|---|---|---|
| 1. | நடுநாட்டு திருத்தலங்கள் (எண். 59-111) | 1998 |
| 2. | சத்த சதகம் | 702 |

**பத்தாந் தொகுதி - பாடல்கள் - 3361**

| | | |
|---|---|---|
| 1. | கௌமார தத்துவ நூல்கள் | 14 |
| 2. | நீதி நூல்கள் (10) | 2580 |
| 3. | ஏழாம் இலக்கணம் | 300 |

**பதினொராந் தொகுதி - பாடல்கள் - 2697**

| | | |
|---|---|---|
| 1. | சோழநாட்டு திருத்தலங்கள் (எண் 112-145) | 1329 |
| 2. | தெய்வத் திருவாயிரம் | 1002 |
| 3. | நந்தனப் பாமாலை | 366 |

**பன்னிரெண்டாந் தொகுதி - பாடல்கள் - 3003**

| | | |
|---|---|---|
| 1. | புலவர் புராணம் | 3003 |

**பதிமூன்றாந் தொகுதி - பாடல்கள் - 2754**

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பரம் | 1333 |
| 2. | பலவகை பதிகங்கள் (61) | 808 |
| 3. | சிறுவகை நூல்கள் (13) | 613 |

**பதினான்காந் தொகுதி - பாடல்கள் - 2868**

| | | |
|---|---|---|
| 1. | கொங்குநாட்டுத் திருத்தலங்கள் (எண் 146-164) | 642 |
| 2. | அந்தாதி, அலங்கார நூல்கள் (18) | 1926 |
| 3. | குரு தோத்திரங்கள் (17) | 300 |

**பதினைந்தாந் தொகுதி - பாடல்கள் - 2494**

| | | |
|---|---|---|
| 1. | பாண்டி நாட்டு திருத்தலங்கள் (165-185) | 828 |
| 2. | திருநெல்வேலி | 1297 |
| 3. | கேரளா, இலங்கை (186-189) | 294 |
| 4. | பல்வகை துதி பாக்கள் | 75 |

**பதினாறாந் தொகுதி - பாடல்கள் - 2474**

| | | |
|---|---|---|
| 1. | திருவாமாத்தூர் | 2474 |

**பதினேழாந் தொகுதி - பாடல்கள் - 3043**

| | | |
|---|---|---|
| 1. | திருவாமாத்தூர் தல புராணம் | 1010 |
| 2. | குருபரதத்துவ காவியம் | 1247 |
| 3. | அறுவகை இலக்கணம் | 786 |

**பதினெட்டாந் தொகுதி - பாடல்கள் - 2866**

| | | |
|---|---|---|
| 1. | ஐயாயிரம் பிரபந்தம் | 1064 |
| 2. | முருகன் பதிகம் 82 | 1066 |
| 3. | தனிப்பாடல் திரட்டு | 210 |
| 4. | ஆய்வு செய்ய வேண்டிய திருத்தலங்கள் (190- 222) | 526 |

***குறிப்பு:*** *சில தொகுதிகளில் பாடல்கள் குறைவுபடவோ நிறைவு பட கூடும். முழுப்பாடல்களும் வெளியான பின்புதான் பாட்டுக் களின் மொத்த சரியான எண்ணிக்கை தெளிவுபடும்.*

*திருச்சிற்றம்பலம்*

மகான் ‘‘வண்ணச்சரபம்’’ தண்டபாணி சுவாமிகள் அருளிய

# மொழிநெறியெழுபா

மற்றும்

# நூல் தொகையும்

இந்நூல் வைகுண்டவாசிகள்

**திரு. கோவிந்தசாமி - திருமதி. ஆண்டாள்**

அவர்களுக்கு சமர்ப்பணம்.

அன்னாரது புதல்வர்கள், மருமகன், மருமகள்

**கோ. கனகராஜ் - பிரமிளா**

**கோ. முரளிதரன் - சாந்தி**

**மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின்**
**182-ஆவது திருநட்சத்திர வெளியீடு**

# நூல் விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | மொழிநெறியெழுபா |
| நூலாசிரியர் | : | மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| நூலின் வகை | : | துதிநூல் |
| முதற்பதிப்பு | : | 2020, திசம்பர் - கார்த்திகை, அத்த (ஹஸ்தம்) |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 32 |
| தாள் | : | 16 கி.கி. மேப்லித்தோ |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| படிகள் | : | 1000 |
| கிடைக்குமிடங்கள் | : | |
| அச்சாக்கம் | : | ஆர்.ஜி.பிரிண்டர்ஸ், சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417 |

*ஸ்ரீ:*

# முன்னுரை

*கோவை சிரவையாதீனம் கௌமார மடாலயம் தவத்திரு குமரகுருபர சுவாமிகளையும் திருவாமாத்தூர் கௌமார மடாலயத் தலைவர் திரு. தி.மு.தண்டபாணி ஐயா அவர்களையும் திருவடி பணிந்து வணங்கி முன்னுரையை தொடங்குகிறேன்.*

*'மொழி நெறியெழுபா' என்பது வேதங்களில் குறிக்கப் பட்டுள்ள சண்மதங்களுக்கும், தனித்தனி தலைமைத் தெய்வங் களாயுள்ள சூரியன், சிவன், அம்பிகை, விட்டுணு, கணபதி, முருகன் என்று மூர்த்திகளையும் அவற்றின் மேற்போந்த அதீத நெறிக்கு லட்சியமாய் விளங்கும் பொது பொருளையும் முன்னிலைப்படுத்தி துதிவடிவமாய் ஏழு அகவற்பாக்களால் (314 அடியில்) தமது அநுபூதியிற் கண்ட முறைப்படி கூறியுள்ளார் இந்நூலாசிரியராகிய 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள்.*

*கடவுள் ஒன்றேயாயிருக்க ஏழு கடவுளைத் துதிப்பது ஏன்? கடவுள் ஒன்றே - வழிபடும் அன்பர் மனநிலைக்கேற்ப ஆறு குணங்களையுடைய பரம்பொருள் ஒன்றை ஆறு கடவுளாக பல்வேறு பெயர், வடிவம், வரலாறு ஆகிய வகைகளில் நம் குருமார்கள் அமைத்துள்ளார்கள். (எல்லா நிலைகட்கும் மூலம் ஆவது எச்சமயத்துக்கும் பொதுவான பரம்பொருள் ஒன்றேயாம்).*

*கிழமைகள் ஏழும் இம்முறையில் அமைந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | சௌரம் | சூரியன் | ஒளித்தன்மை |
| திங்கள் | சைவம் | சிவன் | ஒடுக்குந்தன்மை |
| செவ்வாய் | சாத்தேயம் | சத்தி | உதவுந் தன்மை |
| புதன் | வைணவம் | திருமால் | காக்குந் தன்மை |
| வியாழன் | காணாபத்தியம் | கணபதி | இடையூறு அகற்றல் |
| வெள்ளி | கௌமாரம் | முருகன் (குமரன்) | ஞானஉபதேசம் செய்தல் |
| சனி | சமயாதீதம் | பொது | (குரு) |

*இந்த வரிசையில் அமைக்கப்பட்ட துதி நூலே ''மொழிநெறியெழுபா.'' (சண்மதமும் தழுவி அப்பால் தாண்டி அதீதத்தைச் சார்ந்துரிமைக் குருபரனை தனிப்பரம் என்று ஓதும் உண்மை அநுபூதியுடைய பெரியோர்களுக்கே விளங்கற்பாலது). இம்முறையில் வண்ணச்சரபர் அருளிய நூல்கள் பலவாம். ஏகன் எழுபது, எழுபா எழுபது, திருப்பொது சூத்திரம், சமய சூத்திரம், ஏழாயிரம் பிரபந்தம் ஆகியன அவற்றுள் சில.*

*நிகழும் சார்வரி வருடம் (2020) கார்த்திகை மாதம் அத்த நட்சதிதரம் (10-12-2020) சுவாமிகளின் 189-வது திரு நட்சத்திர (திருஅவதாரத் திருநாள்) வெளியீடாக இந்நூல் வெளி வருகிறது. அன்பர்கள் நாள் தோறும் ஓதி இறையருளையும் குருவருளையும் பெறுமாறு வேண்டுகிறோம்.*

*(இம்முன்னுரை சுவாமிகளின் பெயரர் திரு.முருகதாசர் ஐயா மற்றும் அவர் மகன் சங்கரலிங்கம் ஐயா ஆகியோர் 1969, 1977 அருளிய நூல் தொகுப்பில் இருந்து திரட்டப்பட்டது.*

Dr. G. **முரளிதரன்**

*நெ. 43, எடத்தெரு, பாலக்கரை,*
*திருச்சி-620 001. செல் : 99442 50602*

## பதிப்பாளரின் பதிப்புரை

''வானவரும் மானிடரும் மற்றையரும் வாழ்த்துபொது
ஆனபர தெய்வம் அதைநாடி-நானறையும்
செஞ்சொல் தமிழ்ப்பதிகம் சீர்பொருந்தச் செய்தருளற்(கு)
அஞ்சொல் குருபதங்காப் பாம்.''

*இந்நூலாசிரியர் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் திருநெல்வேலியில் 1839-ஆம் ஆண்டில் அவதரித்து, இளமை முதல் வேற் பூசையில் ஆர்வம் கொண்டு பல கௌமார சாத்திர, தோத்திர, கீர்த்தனை, நாடக, சரித்திர நூல்கள் அருளி, பல தல வழிபாடு செய்து, ஆங்காங்குள்ள இறைவன் மீது துதிப்பாடல்கள் இயற்றி, சீவகருணை நெறியை வளர்த்து இறுதியில் விழுப்புரத்தை அடுத்த திருவாமாத்தூரில் 1898-ஆம் ஆண்டில் திருவருள் பேறு எய்தினார்.*

*சுவாமிகளால் பாடப்பெற்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை கௌமார சபையார், 'ஊர்த்தொகையும் பாடல் தொகையும்' என்ற நூலை வெளியிட்டு உள்ளனர்.*

*அந்நூலில் சுவாமிகள் படைப்புகள் மற்றும் அவர் பாடி பரவிய திருத்தலங்களும் அவற்றிற்க்கான தோத்திர பட்டியல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த இரண்டு பட்டியல்களும், இந்நூலின் பிற்பகுதியில் உள்ளன.*

*இந்த இரண்டு பட்டியல்களையும் இணைத்து 18 தொகுதிகளாக அடியேன் தொகுத்துள்ளேன். விரைவில் சுவாமிகளின் அனைத்து நூல்களும் வெளியிடப் பெற வேண்டும் என்ற ஒற்றை குறிக்கோளுடன் இம்முயற்சி மேற் கொள்ளப்பட்டது. இந்த நூல் தொகுப்புக்கு, சிரவையாதீன மூன்றாம் குருமகா சந்நிதானங்களாக எழுந்தருளியிருந்த சுந்தர சுவாமிகள் விரும்பியது போல் ''வண்ணச் சரபரின்*

*வண்டமிழ்க் களஞ்சியம்'' என்று வழங்கலாமா? சிரவை யாதின தவத்திரு குமரகுருதாச சுவாமிகளின் திருவருளுக்கு இலக்காகட்டும்.*

*மொழிநெறியெழுபா நூலின் மூலப்பிரதியை கொடுத்து உதவியவர் : 'திருப்புகழ் அமுதன்' வளையப்பேட்டை ரா.கிருஷ்ணன், சென்னை.*

*மூலநூல் சீர், சந்தி பிரித்து அருஞ்சொற்பொருள் இயற்றி உதவியவர் : முனைவர். ப.வேங்கடேசன் தமிழ்துறை இணைப் பேராசிரியர், பெரியார் ஈ.வே.ரா.கல்லூரி, திருச்சி.*

*இந்த 18 தொகுதிகளும் செம்பதிப்பாக வெளிவர முருக பக்தர்கள் அனைவரும் ஒன்றுபட்டு இணைந்து செயல்படு வோம். அடியேன் கூறியதில் பிழையிருப்பின் ஆன்றோர் களையும், சிரவை யாதீனத்தையும் மன்னிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.*

*இங்ஙனம்*

**அடியேன் முரளிதரன்**

குருவே துணை

# மொழிநெறியெழுபா

## காப்பு

### அகவற்பா

''மொழிநெறி எழுபா முறையின் நுவல
விழியொளி நடுவளர் மெய்ப்பொருள் துணையே!''

## நூல்

### சூரியன்

சீர்திகழ் பசுநிறச் சிறைநெட்டு இவுளி[1]
ஏர்திகழ் தரப்பிணித்து இலங்கரை மேனிப்
பாகன் ஓச்சப் படுபெரும் பழந்தேர்
மாக மீக்குலா 'மை'[2] முதல் 'கயல்'[3] ஈறு
ஆய பன்னிரண்டு அணித்தெருத் தோறும்
ஏயதோர் உருள்தடம் இயைதரல் காட்டக்
கோழி, காக்கை, குயில், மயில் அனைய
வாழி என்று ஏத்துநர் மான[4] ஒலிதரக்
காமுறு[5] கணவர்க் காண்தரு மகளிர்
தாம் உவப்பு எய்தலில் தாமரை மலரப்

---

*(1.இவுளி-குதிரை, 2.மை-மேஷராசி, 3.கயல்-மீனராசி, 4.மான-போல 5.காமுறு-விரும்பத்தக்க).*

பொருக்கரை நெல்லி புளிவிடத் தலைநேர்
திருக்கிளர் மரத்தொகைச் சிற்றிலை விரியக்
கலவி இன்புறீஇய காளையரொ[1]டு செவ்
இலவிதழ் மடவியர்[2] ஏங்குபு நீங்க
ஆறலை கள்வர் அகத்துறக் கூகை[3]
சீறுடல் புலியுறழ் சிலமலைக் குகையுற
அயர்வறும் பேரருள் அந்தணர் யாரும்
வியன்மறை நூல்வழி வேண்டுப முயலப்
பிரிவுழி இரங்கிய பெற்றியின் இளையார்
வரிமலி கழை[4]க்கை மதன்மால் யானை
துஞ்சல் கண்டு உவப்பத் துகளில்[5] பல் கரத்தாய்!

---

*(1.மடவியர்-மகளிர், 2.கூகை-ஆந்தை, 3.காளையர்-கணவன்மார், 4.கழை-மூங்கில், 5.துகளில்-குற்றமில்லாத)*

அஞ்சலி ஏற்றிட்டு அவிர் வெயில் பரப்பிப்
பைவிரித்து ஆடிய பாந்தள்[1] குருளை
மை[2]விடம் எய்தி மகிழவும் வழங்கிக்
காலம் அளக்கும் காலெ[3]னக் குலாஅய
ஞாலம் அளக்கும் ஞாயிறு எம் பெரும!
தேன்துளி அரும்பும் செந்நிறா முளரிக்
கோன்[4] துணைமகளிர் குளிர்மருங்கு எழில் மால்[5]
பால்நிறக் குன்றில் பசுமுகில் படர்ந்தாங்கு
ஆனி[6]யில் வடிவத்து அழகிய கிழவன்[7]
என்னும் மூவரொடு ஏனைய கடவுளர்
மன்னுநீஇய வயின் பரு[8] மணியே!

---

*(1.பாந்தள்-பாம்பு, 2.மை-இருட்டு, 3.கால்-அளக்கும்கருவி, 4.முளரிக்கோன்-நான்முகன், 5.மால்-திருமால், 6.ஆனி-குற்றம், 7.அழகியகிழவன்-சிவபெருமான், 8.பரு-பெரிய)*

சிறுகோங்கு அரும்பில் திரள்முலை ஒருத்தி[1]
நறுவீர் ஈகை மகன்[2] பெறக் கொடுத்துப்
பொன்மலை[3] பிளந்து புணரி[4]யில் எறிந்தான்[5]
தன்மகற்கு[6] உரைநலம்[7] சாற்றிய தகையாய்!
எண்ணில் கோடி எறிமணி முடித்தலை
மண்ணில் உருளல் வகைபடக் கண்டாய்!
பன்னெறிக் குரவர் பான்மையும் தேறிப்
புன்னெறிக் கயவர் புலைமுதல் பொறுத்தாய்!

---

*(1.ஒருத்தி-குந்தி, 2.மகன்-கர்ணன், 3.பொன்மலை-மேருமலை, 4.புணரி-கடல், 5.எறிந்தான்-வாயு, 6.மகன்-அனுமன், 7.உரைநலம்-சாத்திரங்கள்)*

செந்நீர்த் திலகச் சிறியவர் சிலர்க்கும்
வெந்நீர் களையும் வியனருள் புனைந்தாய்!
கொல்லா நிலையில் கொழீஇய மனத்து
வல்லார் பலரும் வழிபட நின்றாய்!
நனவில்[1] சேவை நனிதரல் அன்றிக்
கனவினும் சிலகால் கவின்றெனை ஆண்டாய்!

நின்னருள் சிவணிய நீர்மையது அலதொன்று
உன்ன அரிதென நன்கு உணர்ந்தனன்; ஒருநீ
அடிதலை அறைதற்கு அரிய பல்துயர்
குடிகொளக் கண்டு குலைதரச் செயல் நீத்து
எண்ணிய வண்ணம் யாவையும் இயற்றி
விண்ணினும் மாறா வியன்புகழ் நிறீஇ
மற்றும் ஒருடல் வாராது[2]
உற்றுனைக் கருதும் உறுதி தந்து அருளே.

---

*(1.நனவில்-பகலில், 2.ஒருடல் வாராது-மீண்டும் பிறவாது)*

## சிவபெருமான்

திங்களில்[1] வகிர்ந்த சிறிய வெண்கீற்றும்
வெங்கனல் கடுக்கும் விட[2]வாய் அரவும்
கங்கையும் இதழிக்[3] கண்ணி[4] யாதிய
சங்கையின் மலரும் தழைத்த செஞ்சடையும்
செங்கதிர், மதியம், தீ,எனத் திகழும்
அங்கண் ஓர் மூன்றும் ஆகமம் எழுநான்கு[5]
இயற்றிய வாயும், இருமகார்[6] முகந்து
வியத்தகு நாசியும் வெள்வளைச் செவியும்
சதுமறைக் கிழவர்[7] தலைவடம், கேழல்[8]
புதுமருப்பு[9] ஆமைப்[10] புறத்துஓடு ஆதிய

---

*(1.திங்கள்-பிறைநிலவு, 2.விடம்-நஞ்சு, 3.இதழி-கொன்றை, 4.கண்ணி-தலைமாலை, 5.எழுநான்கு-28ஆகமம், 6.மகார்-குழந்தைகள் (விநாயகன், முருகன்), 7.கிழவர்-பிரமன், 8.கேழல்-பன்றி, 9.மருப்பு- கொம்பு, 10.ஆமை-திருமாலின் கூர்ம, வராக அவதாரச் செய்திகள்)*

செவ்விதின் அணிந்த திருக்கறை மிடறும்[1]
நவ்வி,[2] மழுப்படை, நலம்திகழ் அபயம்
வரதம் தோய்தரு மலர்க்கை நான்கும்
அரவொடு[3] புலித்தோல் ஆர்த்த அரையும்
கழலணி நாடகக்[4] கால்மலர்த் துணையும்

தழல்[5]புரை மேனியும் தாங்கிய தலைவ!
கைவிட்டு அகலாக் கான்முளைக் கவுரி[6]
மைவிற் கலப மயில் என அருகில்
திகழ்தர விடை[7]மேல் சென்று, சென்று
தகவில் வாள் அவுணரும்[8] தாம்விழைந்துள்ள
இறுமாப்பு[9] எய்த இனிதருள் புரிந்தோய்!
பெறுமாறு எண்ணிப் பெரிது அயர்கின்றேன்!

---

*(1.மிடறு-கழுத்து, 2.நவ்வி-மான், 3.அரவு-பாம்பு, 4.நாடகம்-நடனம், 5.தழல்-நெருப்பு, 6.கவுரி-உமை, 7.விடை-காளை, 8.அவுணர்-அரக்கர், 9.இறுமாப்பு-கர்வம்)*

தாளால் நடந்து,[1] தலை விறகு இறக்கிக்
கேளார்க் கருதிக்[2] கிளரிசை பயிலல்
ஊடிய மங்கை உரிமை எய்த
நாடிச் செலவிடு[3] நல்தூது ஆதல்
அனைய எனாஅ தகத்து விழைவன்று
உனை அறிந்து உலகிற்கு உதவு நால்வரொடு[4]
ஒருவன் ஆகி உனாஅது எழுத்தைந்து[5]
இருநிலத்துத் துதித்தாங்கு இலங்கிசை நிறீஇ

---

*(அடிகள் 23-26 வரை, விறகு விற்றமை, இசைபாடியமை, சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூது சென்றமை ஆகிய நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன) நால்வர்-சமயக்குரவர், எழுத்தைந்து-நமசிவாய)*

ஆயிரத்து ஓரெட்டு ஆய அனகக்
கோயில் கண்டு இறைஞ்சிக் குறித்தவாறு ஆடிப்
பெறலரும் வீட்டுள் பேணுநர் தம்மோடு
உறவிடல் அதன்பொருட்டு ஒன்று முற்செய்தி
ஈனம்[1] தருபொருள் இச்சை[2] அதனால்
மானம் குன்றி மனைதொறும் திரியும்
என்அகம் புரையும் இருங்கற் பாறை
தன்னகத்து அகழ்ந்த தனிப்பெருங் கிணற்றில்
பேரருள் அன்ன பெற்றி பெறுநல்

நீரனை தோன்றி நிறைந்து வழிந்தொரு
திருநதி யாகித் தெண்ணீர்ப்
பொருநை ஆற்றில் புகக்காண்டரலே.

---

*(1.ஈனம்-இழிவு, 2.இச்சை-விருப்பம்)*

## பராசத்தி

பொன்மலர்க் கமலப் புத்தேள்[1] நாவில்
சொல்மதுப் பெய்யும் தூநிறக்[2] கொடி[3]யும்
கால மழையில் கவின்தரு காமர்
மால் அகலத்து[4] மரீஇய திருவும்
பனிமலி இமயப் பைம்புனல் வாவி
தனில் அவிழ் நறும்பூத் தருசிறு குயிலும்
ஆகி மையலும் அறிவும் கடந்து
தேகியும் தானாத் திகழ்தரும் அம்மே!
குக்குடம்[5] பொறித்த கொடியணி குன்றாக்
கைக்குருந் தினுக்கோர் கதிர்வேல் ஆகி
யாவரும் புகழும் ஏற்றம் நல்கித்
தேவர்தம் இடுக்கண் தீர்தரச் செய்தாய்!

---

*(1.கமலப்புத்தேள்-பிரமன், 2.தூநிறம்-வெண்மை, 3.கொடி-சரஸ்வதி, 4.அகலம்-மார்பு, 5.குக்குடம்-சேவல்)*

காழிநல் நகர்க் கவுணியர் மதலைக்கு[1]
ஏழிசைத் தமிழில் இருந்திறல் எய்தத்
தேமல் பூத்த சிறுமுலை நறும்பால்
காமமில் ஞானக் கலையுடன் அளித்தாய்!
வடிதமிழ்ப் புலமை வாய்ந்தோன் ஒருவற்கு
அடிசில்[2] இட்டு அவன்மகள் ஆமெனச் சென்றாய்!
காரிருள் இரவைக் கலைமுழு மதியவிர்
சீர் இரவு என்னச் செப்பினற் காப்பான்
காதணி ஒன்றைக் கழற்றி எறிந்து
பூதலம் முற்றும் புகழ்படக் கண்டாய்

---

*(1.கவுணியர் மதலை-ஞானசம்பந்தர், 2.அடிசில்-உணவு)*

வண்தமிழ்ப் பொதிய மால்வரைத்[1] தலைநின்று
அண்டரும்[2] வெரூஉம் அடல்கெழு முருடர்
சிறுகுடில் பண்டம் சேர்தரக் கவர்ந்து
தறுகண் வேழத்[3] தழல்[4] நிறக் குருளை
ஆதிய நனீஇர்த்து அணிநடை பயிலும்
தீதில் நீர்ப் பொருநைத் திருநெல் வேலியில்
ஒருபெருந் தொண்டன் உள்ளம் குளிர
அருமகவு அளித்தாய் அழகிய கிள்ளைப்
பரியின் நற்கங்கைப் பனிமலர்க் கணையும்[5]
வரிசிலைக் கழையும் வழங்கல் முதலா
நின்புகழ் விரித்து யான் நிகழ்த்தரும் பால
அன்பு உறீஇய அகத்தனும் அல்லேன்

---

*(1.வரை-மலை, 2.அண்டர்-தேவர், 3.வேழம்-யானை, 4.அழல்-நெருப்பு, 5.கணை-அம்பு)*

அழன்மலை ஒருசார் அங்ஙனம் பயின்ற
நிழல் மலியாடல் நினைத்துளன் இரங்கிப்
பொன்மயல்[1] களைந்து புகல்வன பலவும்
தன்மயம் ஆய தனிநிலை உணர்த்தி
இகலவர்த்[2] தாக்கும் இருந்திறல் வயவர்[3]
அகமகிழ்ந்து இறைஞ்சற்கு ஆவன நல்கி
இறப்பொடு பிறப்பும் இன்றி
மறப்பின் மெய் வீட்டுள்[4] வாழ வைத்து அருளே!

---

*(1.பொன்மயல்-பொன்னாசை, 2.இகலவர்-பகைவர், 3.வயவர்-வீரர், 4.வீடு-முத்தி)*

## திருமால்

நற்குணம், தூய்மை, நனிநிறைவு, இனிமை
நிற்கை தைஇய நெஞ்சுறழ் கடலின்
நனந்தலை விரித்த நாக மெல்லணையில்
அனந்தனைப் புரையும்[1] கரிய மேனியும்
ஞாயிறு அன்ன நகுகதிர் முடியும்

மீஇயை[2] தருகுறி[3] விளங்கு நெற்றியும்
புதுமலர்க் கமலம்[4] போலிரு கண்ணும்
பதுமை அவிர்கவுள்[5] பரிமளம் உகந்த
நாசியும் மகர நால்[6] திரு செவியும்
மாசில் செம்பவளத்து அவிர்கனி வாயும்

---

*(1.புரையும்-போன்றிருக்கும், 2.மீஇயை-மேல்நோக்கும், 3.குறி-நாமம், 4.கமலம்-தாமரை, 5.கவுள்-கன்னம், 6.நால்-தொங்கும்)*

நச்சினர்க்[1] காத்து நணுகிலர்[2] செகுத்துப்
பச்சிலைத் துளவும்[3] பணிகளும் வாய்ந்து
சுடர்திகழ் ஆழியும்[4] சுரிமுகச் சங்கும்
இடர் கெடுத்தருள் செயும் இயல்பும் ஏய்ந்த
நாற் பெருந்தோளும் நாவலம் பசும்பொன்
நாற்பொலி தானையும் மதிவியன் மணியும்[5]
மறுவும் கருணையும் மாற்றார் மாயக்
கறுவும் குணனும் கமலையும்[6] கவின்ற
மருமமும் நான்முக மறையோற் பயந்த
பருமலர் உந்தியும் பதிநால் உலகும்
கொண்டியல் பண்டி[7]யும் கோசிகம்[8] புனைந்து
வண்டிரை மலர்க்கை மதனன்[9] தழீஇய
சீரொடு பிறங்கும் திருவரை நலனும்
பாரொடு விண்ணும் படுதுணை அடியும்
அமைதர விளக்கி அறிதுயில் அமரும்
சிமையம் என்னத் திகழ் ஒரு நெடியோய்!

---

*(1.நச்சினர்-அடியார், 2.நணுகிலர்-பகைவர், 3.துளவு-துளசி, 4.ஆழி-சக்கரம், 5.மணி-கௌஸ்துபம், 6.கமலை-திருமகள், 7.பண்டி-வயிறு, 8.கோசிகம்-பட்டாடை, 9.மதனன்-காமன்)*

பொல்லார்[1] மிகையால் புவிமகள் பொறுப்பாள்
அல்லள் ஆகி அலறுந் தோஒறும்
வேறு வேறு இயற்கையி[2]ல் விளங்கி அவரை
நூறு[3] மாண்கெழீஇ நுடங்கரும் திறலோய்
குரவர் திருத்தாள் கொளுநெறி கிடப்பப்
பரவு வான்பதம் பரித்துயர் பண்போய்

செங்கண் கருநாத் தீயுமிழ் வெண்பல்
பொங்கச் சினவாள் பொறியரவு உயர்த்தோன்[4]
பேரறிவினரும் பிழைபடும் அவைக்கண்
கார் அளக[5]த்துக் கட்டவிழ் தரநின்று
அழுது கூஉய அணிநடை மயில்நேர்
விழுமியட்கு[6] அளவில் மேகலை[7] அளித்தாய்

---

*(1.பொல்லார்-தீயவர், 2.இயற்கை-அவதாரம், 3.நூறு-பொடியாக்கி, 4.அரவுயர்த்தோன்-துரியோதனன், 5.அளகம்-கூந்தல், 6.விழிமியள்-திரௌபதி, 7.மேகலை-ஓரணி, இங்கு ஆடையைக் குறித்தது)*

பாலன்[1] ஒருவன் பருவரல் ஒழிப்பான்
கோலக் கனகன்[2] குடர் பறித்து அணிந்தாய்
பனைக்கை வெண்கோட்டுப் பாழியங் களிறு[3]
நினைக்கை ஓர்ந்து நேர்வரல் ஆதிய
எண்ணில் கோடி இருந்தகை எய்திப்
புண்ணியம் முயலும் பொருவில் பகவ
எண்பொறி கருதும் இயல்பில் என்பால்
கண்பொழி கருணைக் கடல் துளி தெறித்த
உண்மை எவ்வுலகத்து உருநறும் அறிய
வெண்மை சால் களத்து விறல் புள் அரசில்[4]
வந்தொரு நூற்றெண் வளம்பதி[5] பாடல்
தந்தொருங்கு அடியார்[6] தம்மொடும் கூட்டி
நண்ணிய வண்ணம் நானிலத்து ஆடும்
திண்ணிமை காட்டித் திரும்பா வீட்டில்[7]
நின் உருவ[8]த்தொடு நீடு
மன்னுறீஇ மகிழ்வாழ் அருளே!

---

*(1.பாலன்-பிரகலாதன், 2.கனகன்-இரணியன், 3.களிறு-கஜேந்திரன், 4.புள்ளரசு-கருடன், 5.வளம்பதி-திவ்யதேசம், 6.அடியார்-ஆழ்வார், 7.வீடு-திருநாடு, 8.நின்னுருவம்-சாரூபம்)*

## கணபதி

எண்பதிற்று ஒருநான்கு இலக்கம் என்னும்
வண்படும் உயிர்த்திரள் வகைகளில் சீர்த்தது
ஆய மாமுக[1]த்து அறப்பெருங் குன்றே!
காயக[2] மனத்தோர் காண அருங் கனியே!
கால்[3] கலூழ்ந்து[4] இரட்டும்[5] கவின்தழை செவியாய்!
வால்கெழு பிறைவாள் மருப்[6]பொன்று உடையாய்!
மடங்கெடக் கற்றாள்[7] மலையுறச் சேர்த்த
முடங்கு நெடுங்கை முன்னை முதல்வ
தோட்டி[8]யும் கயிறும்[9] துகளறு கனியும்
தீட்டிய கோடும் செங்கையில் அணிந்தாய்!

---

*(1.மாமுகம்-பெரியமுகம், 2.காயகம்-மயக்கம், 3.கால்-காற்று, 4.கலூழ்தல்-வீசுதல், 5.இரட்டும்-எழுப்பும், 6.மருப்பு-தந்தம், 7.கற்றாள்-ஔவையார், 8.தோட்டி-அங்குசம், 9.கயிறு-பாசக்கயிறு)*

பேழை[1] அன்ன பெருவயிற்று உண்டி
மாழையம் கிரி[2]யில் வகுப்பார்[3]க்கு எளியாய்
வேதத் தலையில் மிசைநடம் பயில்பொன்
பாதத் துணையால் பழவினை கெடுப்பாய்
சங்கரன் பணியும் சலதித்[4] துயில்கூர்
செங்கண்மால் கலனும்[5] சேர்த்து இனிது அணிந்தாய்
ஆகு   மஞ்ஞை அரி ஏறாமவற்று
ஏகும் உவகை இசைஇய எந்தாய்
முக்கணில் ஒன்றை மூடி மற்றைய
மெய்க்கருணைக் கண் விழிக்கும் விநாயக!

---

*(1.பேழை-பெரியபெட்டி, 2.கிரி-மலை, 3.வகுப்பார்-படைப்போர், 4.சலதி-கடல், 5.கலன்-சக்கரம்,*

வெண்பொடி குளித்த விறற்கணங்கு அவைஇய
திண்பொலம்[1] கிரிநேர்[2] திருவுருத் தலைவ!
ஈன்றாள் முலைப்பால் இடைநனை பல்போய்
மான்றாழ் விழிச்சிறு மடந்தையர் வாயிதழ்

விழைதரு பல்தொகை வெளிப்படு நாளில்
தழைகொடு நின் பொற்றாள் அருச்சிக்கும்
வீறு தோய்ந்தும் விளம்ப அரிதாம் பல்
பேறு பெற்றும் பிறர் பால் சென்று
கை விரித்து ஏற்கும் கடுந்துயர் தீர்கிலேன்
பை[3] விரித்து ஆடிய பாந்தள்[4] அன்ன
புன்மிடி[5] முற்றும் புறம்பிற் போஓய்
நல் மனத்து அடியார் நனந்தலை மேஎய்
நின் நிலைப் பிரணவ[6] ஞேயந் தோயா
அந்நிய நெறியோர் அலமரத் தாக்கி
இலை கனி காய் கிழங்கு என்பன அன்றி
நிலை பெயர்பவற்றின் நிணம்[7] தின்னாமை
யாரும் எய்த இருநிலத்து இயற்றுபு
சீருயர் தமிழ்கொடு செய்யுள் மிக்கு இசைத்துக்
கதிர்மதி ஒளிர்தருங் காறும்[8] உலகத்து
அதிர்தொனி தருபுகழ் ஆக நிறீஇ
இன்னும் ஓர் தாய் வயிற்று எய்தாது
உன் உருவத்துள் உறு கதி அருளே!

---

*(1.பொலம்-பொன், 2.கிரிநேர்-மலையொத்த, 3.பை-நச்சுப்பை, 4.பாந்தள்-பாம்பு, 5.மிடி-வறுமை, 6.பிரணவம்-ஓம், 7.நிணம்-இறைச்சி, 8.காறும்- வரையிலும்)*

## முருகன்

செய்ய பொன் சிலம்பைச்[1] சிலையதாக்கி
வெய்யர் ஊர்[2] பொடித்த வியன்புகழ் போலும்
கானம் ஆர்த்த கடுக்கைக்[3] கண்ணி[4]
வானவன்[5] தந்த வரத்தால் இறுமாந்து
அண்ட[6]ரைச் சிறைசெய்து அணி அரமகளிர்
மண்டலத்து அவுண மாதர் ஏவல்
செய்து இளைத்து இரங்கத் திரைநீர் ஆழிக்
கைதிகழ் அரணில் கருமுகில் எனவாழ்
தானவர் தமரொடு தடிகை நண்ணி
ஏன[7]மொடு இகலிய எகினம்[8] காணா

நெற்றியங் கண்ணில் நின்றினிது உதித்து
வற்றிடா நறுநீர் வாவி[9]யில் வாழ்ந்தோய்

---

*(1.சிலம்பு-மேருமலை, 2.வெய்யர் ஊர்-திரிபுரம், 3.கடுக்கை-கொன்றை, 4.கண்ணி-தலைமாலை, 5.வானவன்-சிவன், 6.அண்டர்-தேவர், 7.ஏனம்-காட்டுப்பன்றி, 8.எகினம்-அன்னம், 9.வாவி-சரவணப் பொய்கை)*

கண்பல வாய்ந்த காருடல் ஒருவன்[1]
விண்பதி புரப்ப வியன்முடி தரித்தாய்
களிமலி அறுகால் கணம்[2]பயில் காமர்
நளினம்[3] ஏய நான்முகற் புடைத்தாய்
கார்மலை என்னக் கவின்தரு நெடியோன்
ஆர்மலிந்து உரைக்கும் நன்னலம் புனைந்தாய்
ஆலமர் கடவுட்கு, அலைகடல் குடித்த
சீல[4]ற்கு, அரிய செம்பொருள்[5] மொழிந்தாய்
குன்றந் தோஒறும் கொடிநடம் பயின்றாய்
நின்தகை[5] நினைத்து நிகழ்த்தியும் மெலிந்தேன்
அலகில் முத்தமிழ்ப் பாட்டு அறைதல் நாடி
உலகு உனதாள் என்று உரைசெயக் கண்டாய்

---

*(1.ஒருவன்-இந்திரன், 2.அறுகால் கணம்-வண்டினம், 3.நளினம்-தாமரை, 4.சீலர்-சிவன், 4.தகை-குணம், 5.செம்பொருள்-பிரணவப் பொருள்)*

இனியான் அகலினும் ஏற்றநீ எள்ளினும்
பணிவார் கடலுடைப் பாரினர்[1] அறியார்
மூவிரண்டு[2] எழுத்து மொழிதரத் தொடங்கி
ஆவி ஆதிய அளித்துள என்பால்
ஒன்றும் பேசாது ஒழிந்திலை அந்தோ
நன்று போல் பல நவின்று இவண் விடுத்தாய்
நீ நுவல் மாற்றம் நிலையினு முடியா
யான் நுவன்றிடல் எவன் என்னினும் அவற்றுள்

பல்விசை நுவலப் படுப ஆய
சொல் விறலேனும் துலங்கக் காட்டாய்

---

*(1.பாரினர்-மக்கள், 2.மூவிரண்டுஎழுத்து-ஆறெழுத்து மந்திரம்: சரவணபவ)*

இங்ஙனம் கடுத்த இதயத்தினை என்று
அங்ஙனம் தரலென்று ஐயுற்று இடைந்தேன்[1]
உலகிற்கு இடையூறு உளுற்ற நாடும்
சிலரும் மகிழச் செய்தால் புணர்ந்தாள்
பால்முலை நுகர்வாய் பகர்மொழி பிறழல்
நூல் முறை அன்று; அதன் உண்மை யாதோ?
புல் நுனி கறித்துப் புனல் மாந்திய மறிக்[2]
கொல் நுதி வாளால் கோறல்[3] கூறிய
புலவற்கு அருளிய புகழ் கொலை புலையே
பலவகைப் பழியும் பாவமும் ஆமென்று
இகழ்வாற்கு இரங்கில் இழிவுறும் என்றோ
அகழ்கல் கிணற்றால் அலமரல்[4] விளைத்தாய்

---

*(1.இடைந்தேன்-வருந்தினேன், 2.மறி-மான், 3.கோறல்-கொல்லுதல், 4.அலமரல்-அச்சம்)*

சிறுகவி ஒன்றுஞ் செய்து உனக்கு அணியார்
பெறுபயன் விழைந்தும் பிழைபடக் கரந்தாய்[1]
பேய் வழிபாடு உடைப் பிணக்கர் தாமும்
தோய்வரிச் சமர்க்கால் சுடர்ச்சிகைக் கொடியின்
மகந்[2]தரு தக[3]ரின் வனப்பு வாய்ந்தவை
சகந்தனில் கோறல் அற்று அணவல்[4] வேட்டது
அறிந்தும் இரங்காது அமைதரல் முறையோ
குறிஞ்சி[5] தோறும் குறித்து உனைப் பராஅய்
மறை நெறி ஆறும் மாமுகம் ஆமென்று
அறைதரல் விளக்கி அழிவில் இன்பதத்து
எய்த நாடினன்; எஃகம்[6] ஏந்தி
மைதரு தோகை மயில் மிசை நாளும்

நனவினும் வந்துமுன் நல்கும்
கனவில் ஆடியவா காட்டுதி விரைந்தே.

---

*(1.கரந்தாய்-மறைந்து நின்றாய், 2.மகம்-வேள்வி, 3.தகர்-ஆடு, 4.அணவல்-சேர்த்தல், 5.குறிஞ்சி-மலை, 6.எஃகம்-வேல்)*

## கடவுள்

பல்வகை மறையும் பகர்ந்தும் அறியாச்
செல்வமே தெய்வத் திருவருள் கடலே
ஒருகுரு எனவந்து உள்ளக மலர்புக்கு
அருள்நெறி அனைத்தும் ஆகி நின்றாய்
எவர் எவர் எவ்வண் எண்ணினும் யாண்டும்
அவர் அவர் அவ்வண் அவிர்தரும்[1] அமுதே
ஆதி[2]யும் நடுவும் அந்த[3]மும் இல்லாச்
சோதி மயமாய்த் துலங்கு மெய்ப்பொருளே.

---

*(1.அவிர்தரும்-காட்சிதரும், 2.ஆதி-பிறப்பு, 3.அந்தம்-இறப்பு)*

ஞால மரீஇய நால்வகை உயிரும்[1]
காலம் முழுதும் கழறினும் முடியாப்
பெரும்புகழ்க் கடவுள் பெரும நின்னருட்சீர்
விரும்பு மாண்பு அளித்து மெலிந்தனன் கண்டாய்
துன்பம் முற்றும் தொலைதரத் தொடர்ந்து ஆண்டு
இன்பக் கடலின் இடை முழுக்கு ஆட்டிச்
சாவா முனிவன் தவப்பெரும் பயனா
நாவாய் அதனில் நல்கிய மகவைச்
சங்கப் புலமைத் தமிழ் வலியினர் தாம்
பங்கப் பட முப்பால்[2] நுவன்றானைச்
சங்கர முனிவனைச் சாற்றும்
புங்கவர் எனையும் புகல வைத்து அருளே!

---

*(1.நால்வகை உயிர்கள்-முட்டை, வியர்வை, வித்து, கருப்பை ஆகிய நான்கில் தோன்றிப் பிறப்பவை, 2.முப்பால்-திருக்குறள்).*

உ
*திருச்சிற்றம்பலம்*

# மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளின் பட்டியல்

| | | *பாடல்கள் தொகை* |
|---|---|---|
| | **சூரியன்** | |
| 1. | சூரியமூர்த்தி பதிகம் (10) | 120 |
| 2. | இரவி எழுபது | 72 |
| 3. | சூரிய மாலை | 32 |
| 4. | சூரியமூர்த்தி எழுகூற்றிருக்கை | 2 |
| 5. | வெண்பா | 2 |
| | **சிவன்** | |
| 6. | சிவபெருமான் பதிக மணிமாலை | 300 |
| 7. | சிவபெருமான் பதிகம் (9) | 103 |
| 8. | சைவ சதகம் | 102 |
| 9. | சிவபெருமான் ஏகபாதத் தந்தாதி | 32 |
| 10. | சிவபெருமான் வெண்பா | 4 |
| 11. | சிவபெருமான் ஒன்பது கூற்றிருக்கை | 2 |
| | **சக்தி** | |
| 12. | சக்தி கவச நூல் | 102 |
| 13. | அம்பிகை ஏழு பதிகம் (7) | 79 |
| 14. | அம்பிகை பதிகம் 5 | 60 |
| 15. | திருமகள் பதிகம் 3 | 36 |
| 16. | அம்பிகை மருந்து கொடுத்த பதிகம் | 12 |
| 17. | ஆணையிட்டழைத்த சரசுவதி பதிகம் | 12 |
| 18. | ஆணையிட்டழைத்த திருமகள் பதிகம் | 12 |
| 19. | திரிபுர சுந்தரி பதிகம் | 12 |
| 20. | தெய்வயானைப்பதிகம் | 12 |
| 21. | வள்ளி பதிகம் | 12 |
| 22. | வள்ளித் தாய் பதிகம் | 12 |

23. பூமாதேவிப் பதிகம் 12
24. குஞ்சரி பஞ்சகம் 7
25. சக்தி பஞ்சகம் 7
26. வள்ளி பஞ்சகம் 7
27. அம்பிகை எழுகூற்றிருக்கை 2
28. காமாட்சி வெண்பா 1
29. கலைமகள் பதிகம் 3 36

## திருமால்

30. திருமால் பத்து பதிகம் 112
31. திருமாலந்தாதி 102
32. திருமால் பதிகம் 7 84
33. அரியேக பாதத் தந்தாதி 32
34. திருமால் தெய்வீகப்பதிகம் 12
35. திருமால் துயில் நீங்கு பதிகம் 12
36. திருமால் எழுகூற்றிருக்கை 2

## விநாயகர்

37. கணபதி மாலை 102
38. விநாயகர் பதிகம் 5 60
39. விநாயகர் ஐந்து பதிகம் 57
40. பிரணவ விநாயகர் பதிகம் 12
41. விநாயகர் எழுகூற்றிருக்கை 2
42. மணிமுத்தாநதி விநாயக வெண்பா 1

## முருகப்பெருமான்

### 1. முருகன் துதி நூல்கள் [8]

43. திருப்புகழ் (1) 107
44. தலையணிச் சீர்இதழகல் அந்தாதி (2) 102
45. முருகன் கௌமார அந்தாதி (3) 102
46. செம்பொனந்தாதி (4) 102
47. கவிவிடந்தாதி (5) 102
48. முருகானந்தலகிரி (6) 102
49. நீட்டுர மாலை 34

50. ஏகத்தாள் இதழகலந்தாதி 32

## 2. கௌமார தத்துவ நூல்கள் (5)

51. கௌமார லகிரி 102
52. சுப்பிரமணிய நூல் 32
53. கௌமார விநோதம் 25
54. கௌமார தீபம் 18
55. கௌமார நூல் 12
56. கௌமாரத் தொகை 14

## 3. முருகப்பெருமான் பதிகங்கள் (22 பதிகங்கள்)

57. அண்டவாதமும் சலிப்பும் நீங்க வேண்டும் பதிகம் 13
58. ஏடனை தீர்க்க வேண்டும் பதிகம் 13
59. கந்தனை திருடன் என்ற பதிகம் 13
60. கந்தனை நல்லவன் என்ற பதிகம் 13
61. கடன் தீர்த்த முருகன் பதிகம் 13
62. கிணற்றுப்பதிகம் (முருகன்) 13
63. சண்முகச் சிவன் பதிகம் 13
64. சிங்கார வேலர் வேண்டுகோட் பதிகம் 13
65. சித்திரத்துறை சிவ குருபரன் பதிகம் 13
66. சிவகுருபரன் பதிகம் 13
67. திருச்செந்தூரான் தேடி வந்த பதிகம் 13
68. திருக்கைவேற் சேவகன் பதிகம் 13
69. தேள் விடந்தீர்த்த பதிகம் 13
70. தூது விட்ட பதிகம் 13
71. பற்றொழிய வேண்டு பதிகம் 13
72. பூமி தேவிப் பதிகம் (முருகன்) 13
73. பெரிய குருபரன் பதிகம் 13
74. பொதுத் தெய்வப் பதிகம் (முருகன்) 13
75. மலைநாட்டுக் குகன் பதிகம் 13
76. வெள்ளை பூ தந்த குகன் பதிகம் 13
77. வேலாயுத வண்ணப் பதிகம் 13
78. கங்கைப் பதிகம் (முருகன்) 13

## முருகன் துதிப் பாக்கள் (67 பாடல்கள்)



| | | |
|---|---|---|
| 79. | கீர்த்தனைகள் | 20 |
| 80. | வெண்பா | 19 |
| 81. | போற்றிப் பனுவல் | 8 |
| 82. | விடுகவிகள் | 8 |
| 83. | எழு கூற்றிருக்கை | 2 |
| 84. | எண் கூற்றிருக்கை | 2 |
| 85. | திருப்புகழ் | 2 |
| 86. | முருகன் வெண்பா | 2 |
| 87. | முருகன் கலிவெண்பா | 1 |
| 88. | அயிலணிகைப் பெருமைக்காரன் வகுப்பு | 2 |
| 89. | வகுப்பு | 1 |
| 90. | முருகன் பதிக வருஷம் | 722 |
| 91. | முருகன் பதிகம் | 82 |
| 92. | ஏழிளையனார் திருப்புகழ் | 1 |
| 93. | படை வீட்டுத் திருப்புகழ்(36) | 38 |
| 94. | படைவீட்டுப் பதிகம் (36) | 468 |



## சமயாதீகம்



| | | |
|---|---|---|
| 95. | சமயாதீதப் பதிகம் (17) | 221 |
| 96. | சமயாதீதத் திருப்புகழ் | 105 |
| 97. | எழு கூற்றந்தாதி | 87 |
| 98. | சண்மத கௌமார சிவடைப்பதிகம் (6) | 72 |
| 99. | சமயாதீத வண்ணப் பதிகம்-2 | 26 |



## சமரசம்



| | | |
|---|---|---|
| 100. | ஏழாயிரப் பிரபந்தம் | - |
| 101. | சமரசப் பதிகம் (16) | 208 |
| 102. | சமரச முன்னிலை நூல் | 102 |
| 103. | பெருமாளந்தாதி (முருகன், திருமால் சிலேடை) | 102 |
| 104. | பெருமானந்தாதி (சிவன், திருமால் சிலேடை) | 102 |
| 105. | சமரசப் பதிகம், நாய்க்குருளைப் பதிகம் | 36 |
| 106. | சந்தக் கலித்துறை அந்தாதி | 32 |

107. கலிநீக்க வேண்டு சமரசப் பதிகம் 13
108. கலியறச் சொன்ன பதிகம் 13
109. தவளைப் பதிகம் 13
110. தெய்வப் பதிகம் 13
111. பிணி தீர்த்த பதிகம் 13
112. அரன், அரி சிலேடைப் பதிகம் 12
113. மொழிநெறி எழுபா 9
114. சமரசத் தசாங்கன் கூற்றிருக்கை 2


## இலக்கணம்


115. அறுவகை இலக்கணம் 786
116. ஏழாம் இலக்கணம் 300
117. வண்ணத்தியல்பு 111


## பல வகை படைப்புகள்


118. புலவர் புராணம் 3003
119. குருபர தத்துவ காவியம் 1247
120. திருவருள் நாட்டம் 1020
121. தெய்வத் திருவாயிரம் 1002
122. சத்த சதகம் 702
123. அருணகிரிநாதர் புராணம் 441
124. நந்தனப் பாமாலை 366


## அந்தாதி, அலங்கார நூல்கள் (18 நூல்கள்)


125. சற்குரு விஜயம் 169
126. சிவகுருநாதன் வெண்பா 102
127. குருநாதன் அந்தாதி 102
128. சித்தர் அந்தாதி 102
129. பாறைக் கிணற்று அந்தாதி 102
130. கங்கை அந்தாதி 102
131. நீரோட்டகத் தலைச் செய்யுள் அந்தாதி 102
132. ஒரு தொடைச் செய்யுள் நீரோட்டகக் குகனந்தாதி 102
133. ஆங்கிலியர் அந்தாதி 102
134. மெய் வரோதய சதகம் 102

| | | |
|---|---|---|
| 135. | தெய்வ கண்ணி | 122 |
| 136. | தெய்வ வழக்கு | 104 |
| 137. | ஆறெழுத்தலங்காரம் | 103 |
| 138. | வேலலங்காரம் | 102 |
| 139. | மயிலலங்காரம் | 102 |
| 140. | தமிழலங்காரம் | 102 |
| 141. | முருகதாசர் அநுபூதி | 102 |
| 142. | தெய்வ அநுபூதி | 102 |


## சிறு நூல்கள் 13 (13 நூல்கள்)


| | | |
|---|---|---|
| 143. | ஏகன் எழுபது | 72 |
| 144. | எழுபா எழுபது | 72 |
| 145. | திருவருட் கல்வி | 72 |
| 146. | முசுகுந்த நாடகம் | 71 |
| 147. | தண்டபாணி அநுபூதி | 39 |
| 148. | திருவருள் வழக்கு | 38 |
| 149. | குரு முன்னிலை நூல் | 38 |
| 150. | முத்தமிழ்ப் பாமாலை | 34 |
| 151. | தெய்வ மஞ்சரி | 34 |
| 152. | தெய்வ மஞ்சரி நூல் | 32 |
| 153. | பேரொலியல் அந்தாதி | 34 |
| 154. | முதல் ஒலியல் அந்தாதி | 32 |
| 155. | திருமேனிச் சிவப்பு | 45 |


## கௌமார தத்துவ நூல்கள் (9) (692 பாடல்கள்)


| | | |
|---|---|---|
| 156. | கௌமார முறைமை (காண்டம் 3) | 308 |
| 157. | நானிலைச் சதகம் | 102 |
| 158. | சதகவுந்தி | 102 |
| 159. | சமய சூத்திரம் | 51 |
| 160. | ஞான அந்தாதி | 32 |
| 161. | பிரணவாநுபூதி | 38 |
| 162. | தியானாநுபூதி | 37 |
| 163. | பதிகவுந்தி | 13 |
| 164. | திருப்பொது சூத்திரம் | 9 |

## நீதி நூல்கள் (10) நூல்கள்

| | | |
|---|---|---|
| 165. | மனுநெறித் திருநூல் | 1300 |
| 166. | வருக்கக்குறள் | 249 |
| 167. | திருவெண்பா | 212 |
| 168. | அருளாட்சி நூல் | 137 |
| 169. | விற்பனம் | 132 |
| 170. | சத்திய சூத்திரம் | 122 |
| 171. | சத்திய வாசகம் | 122 |
| 172. | அரசாட்சி நூல் | 102 |
| 173. | சிறப்பு நூல் | 102 |
| 174. | பொது நூல் | 102 |

## பல வகைப் பதிகங்கள் (61) 808 பாடல்கள்

175. வேண்டுகோள்மாலை 18
176. சத்துரு சங்கார விருத்தம் 18
177. குரு முதற் பாசுரம் 14
178. மெய் வழக்கு மாலை 14
179. குவிபா ஒருபஃது 12
180. திருவருட் போதம் 13
181. பொய்புலவோர்பால் புகல் நவரத்னம் 11
182. பரம குருநாதன் பதிகம்
183. பரதேசி காவலன் பதிகம்
184. பரதெய்வ மகுட ஆசிரியப் பதிகம்
185. திருவருட் சிந்தனை பதிகம்
186. சிவாய குரு பதிகம்
187. திருவடி சூட்டிய பதிகம்
188. சற்குரு பாதப் பதிகம்
189. ஐந்துமுகச்சிவன் ஆறுமுகச்சிவன்ஆன பதிகம்
190. சர்க்குண நிர்க்குண தனிப் பொருள் பதிகம்
191. சிவராத்ரி பதிகம்
192. தெய்வ நாயகன் பதிகம்
193. நல்ல தெய்வங்கள் பதிகம்
194. தெய்வங்கட்குத் தமிழ் ஆசை விளைந்த பதிகம்
195. தமிழ்கவிகள் உதிக்கும் வம்பு சகியா பதிகம்
196. தமிழைத் துதித்த பதிகம்
197. தமிழ் விரும்பும் தெய்வம் இன்றித் தவித்த பதிகம்
198. தெய்வ வாழிப் பதிகம்
199. தமிழ் வெறுத்த பதிகம்

200. கவி எழுதல் விழைந்த பதிகம்
201. பாறையறும் பதிகம்
202. கிணற்று வண்ணப் பதிகம்
203. மைக்கிளை மறுத்த பதிகம்
204. பலி மறுத்த பதிகம்
205. கொலை தீர்க்க வேண்டு பதிகம்
206. கண் நோய் தீர்த்த பதிகம்
207. கை நோய் தீர்த்த பதிகம்
208. கல் விழுந்திடாதபடி காத்த பதிகம்
209. சுரம் தீர்த்த பதிகம் 2
210. அணிற் காத்த பதிகம்
211. பிரியாமை வேண்டும் பதிகம்
212. சித்தி விளையாடல் பதிகம்
213. திருமுலைப்பால் இரந்த பதிகம்
214. கல்லுப்பெருமாள் காட்டுப்பெருமாள் பதிகம்
215. தானே தானான பதிகம்
216. சத்திய சாட்சி பதிகம்
217. உண்மை பதிகம்
218. மெய் வழக்கு பதிகம்
219. வழக்கு பதிகம்
220. சத்திய முன்னிலை பதிகம்
221. பொருட் கவி முழுதும் போம் பதிகம்
222. பாடுந்தன்மை மறுத்த பதிகம்
223. பனை முறியப் பாடிய வெண்பா பதிகம்
224. மரக்கல வருத்தப் பதிகம்
225. தவப் பதிகம்
226. யாத்திரை துயர்தீர வேண்டு பதிகம்
227. வீரவாகு தேவர் பதிகம்-2
228. நவவீரர் பதிகம்
229. குபேரன் பதிகம்
230. சரசுவதி பூரம் கடித்த பதிகம்
231. அரிஹர புத்திரர் பதிகம்
232. சாத்தனார் பதிகம்
233. வேற்படை பதிகம்
234. மழைப்பதிகம்
235. நாமாவளிப் பதிகம் (பொது)
236. ஆயிரம் தீபம் பதிகம்

## தோத்திரங்கள் (17) 300 குரு தோத்திரங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 237. | சடகோபா சதகத்தந்தாதி | 112 | 245. | குகை நமச்சிவாயர் பதிகம் | 12 |
| 238. | சடகோபர் பத்து | 10 | 246. | மருதன் காப்பு பதிகம் | 12 |
| 239. | அகத்திய பதிகம் 2 | 26 | 247. | வடலூரார் வருகைப் பதிகம் | 12 |
| 240. | இருவர் இரட்டைமணிமாலை (சேரமான், ஔவை) | 22 | 248. | வடலூரார் வினாப் பதிகம் | 12 |
| 241. | ஔவையார் பதிகம் | 12 | 249. | திருக்கூட்டப் புகழ்ச்சி | 14 |
| 242. | சேரமன் ஆசிரியப்பா | 02 | 250. | மாணிக்க வாசகர் திரிபு, யமகம், பாடல் | 05 |
| 243. | அருளானந்த மூர்த்தி பஞ்சகம் | 7 | 251. | புலவர் கவி | 02 |
| 244. | ஈசான தேசிகர்பதிகம் | 12 | 252. | திருமலையம்மைகவி | 14 |

## பொது துதிப் பாக்கள் (21) (75 பாடல்கள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 253. | விடுகவி | 20 | 266. | தனிக்குறில் வெண்பா | 01 |
| 254. | விடுகவி | 10 | 267. | தனி நெடில் வெண்பா | 01 |
| 255. | விடுபாட்டு | 09 | 268. | இன்னிசை பஃறொடை வெண்பா | 01 |
| 256. | காப்பு மாலை | 05 | 269. | நேரிசை பற்றொடை வெண்பா | 01 |
| 257. | சற்குரு கவிகள் | 03 | 270. | தையச் சந்ததி கவி | 01 |
| 258. | ஏகபாதம் | 02 | 271. | கிணற்று திருப்புகழ் | 01 |
| 259. | திரிபு யமகக் கவி | 02 | 272. | பொதுவான தெய்வ வகுப்பு | 01 |
| 260. | கட்டளைக் கலித்துறை | 02 | 273. | பல நாமக்கரன் வகுப்பு | 01 |
| 261. | மாலை மாற்று | 02 | 274. | தனிப்பாடல்திரட்டு | 210 |
| 262. | கீர்த்தனைகள் | 09 | | | |
| 263. | அபேத மாலை மாற்று | 01 | | | |
| 264. | ஒரு பொருள் விருத்தம் | 01 | | | |
| 265. | தாழிசை | 01 | | | |

## மகான் 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள் பாடிய பாடல்கள் - திருத்தலங்கள் வாரியாக

| | | |
|---|---|---|
| 1. | திருச்செந்தூர் | 1838 |
| 2. | திருப்பரங்குன்றம் | 66 |
| 3. | பழனி | 1274 |
| 4. | திருஏரகம் | 135 |
| 5. | பழமுதிர்ச்சோலை | 14 |
| 6. | குன்றக்குடி | 161 |
| 7. | திருவுருமாமலை | 117 |
| 8. | திருமலை | 27 |
| 9. | வள்ளிமலை | 14 |
| 10. | கழுகுமலை | 14 |
| 11. | வாசகிரி | 14 |
| 12. | இலஞ்சி | 14 |
| 13. | வேள்விமலை | 14 |
| 14. | திருவரிப்பாடு (கேரளா) | 14 |
| 15. | சிவகிரி (சிவன்மலை) | 40 |
| 16. | எட்டுக்குடி | 14 |
| 17. | எண்கணூர் | 33 |
| 18. | விராலிமலை | 27 |
| 19. | மயிலம் | 198 |
| 20. | திருத்தணி | 41 |
| 21. | திருப்போரூர் | 27 |
| 22. | திருவேங்கடம் | 14 |
| 23. | சத்தி மலை | 14 |
| 24. | நட்சத்திரமலை | 27 |
| 25. | திருவண்ணாமலை | 1373 |
| 26. | சேமாசிபாடி | 14 |
| 27. | அவலூர் மலை | 14 |
| 28. | முத்தர்மலை (சித்தர் மலை) | 27 |
| 29. | வேலுடையான் பட்டினம் | 27 |
| 30. | பெறும் பேறு | 27 |
| 31. | கல்லாலம் பூண்டி | 27 |
| 32. | உடுப்பி சுப்பிரமணியம் (கர்நாடகா) | 14 |
| 33. | கதிர்காமம் (பாண்டிச்சேரி) | 27 |
| 34. | கந்தமாதனகரி (இமயமலை) | 26 |
| 35. | திருவொற்றியூர் | 49 |
| 36. | சென்னை | 715 |
| 37. | இராயபுரம் | 12 |
| 38. | மயிலாப்பூர் | 75 |
| 39. | திருவல்லிக்கேணி | 50 |
| 40. | திருவான்மியூர் | 12 |
| 41. | திருக்கழுக்குன்றம் | 12 |
| 42. | ஆலஞ்சேரி | 16 |
| 43. | இளையனார்வேலூர் | 15 |
| 44. | மாம்பூதூர் | 12 |
| 45. | வயனக்காவூர் | 12 |
| 46. | வந்தவாசி | 12 |
| 47. | அச்சிறுபாக்கம் | 12 |
| 48. | சாலப்பாக்கம் | 12 |
| 49. | செய்யூர்(சேயூர்) | 77 |
| 50. | சூனாம்பேடு | 12 |

| | | |
|---|---|---|
| 51. | மரக்காணம் (மறைக்காணம்) | 12 |
| 52. | திண்டிவனம் | 88 |
| 53. | வானூர் | 38 |
| 54. | அரசிலிபுரம் | 39 |
| 55. | கொடுவூர் | 14 |
| 56. | இரும்பை மாகானம் | 26 |
| 57. | திருவக்கரை | 55 |
| 58. | கொடுக்கூர் | 27 |
| 59. | இராயவேலூர் | 51 |
| 60. | நாரதன்பூண்டி | 12 |
| 61. | திருக்கோவிலூர் | 12 |
| 62. | சிற்றாற்றூர் | 1 |
| 63. | உரத்தூர் | 12 |
| 64. | சாத்தனூர் | 24 |
| 65. | தென்பேறு | 24 |
| 66. | புதுப்பாளையம் | 18 |
| 67. | சாலை | 27 |
| 68. | பனையபுரம் | 24 |
| 69. | திருவாமாத்தூர் | 3484 |
| 70. | ஆவுடையார் பட்டு | 12 |
| 71. | பாப்பனபட்டு | 24 |
| 72. | கயற்றூர் | 24 |
| 73. | வாக்கூர் | 36 |
| 74. | மதுரப்பாக்கம் | 24 |
| 75. | விக்கிரவாண்டி | 86 |
| 76. | விழுப்புரம் | 75 |
| 77. | திருமங்கலம் | 12 |
| 78. | வாதானூர் | 12 |
| 79. | வளவனூர் | 24 |
| 80. | குமாரபுரி | 277 |
| 81. | கோலியனூர் | 19 |
| 82. | திருக்காமேச்சுரம் | 12 |
| 83. | வில்லிப்பாக்கம் | 145 |
| 84. | புதுவை | 315 |
| 85. | வடபுதுவை | 37 |
| 86. | கொற்றபுரி | 12 |
| 87. | அரியநகர் | 12 |
| 88. | முத்தாலு நகர் | 27 |
| 89. | வேதகிரி (புதுவை) | 13 |
| 90. | காரணப்பட்டு | 14 |
| 91. | காராமணிநகர் | 32 |
| 92. | வருகாற்பட்டினம் | 37 |
| 93. | தூக்கணாம்பாக்கம் | 12 |
| 94. | நல்லாற்றூர் | 74 |
| 95. | புருகேச நகர் | 13 |
| 96. | கரையேறவிட்டநகர் | 77 |
| 97. | திருப்பாதிரிப்புலியூர் | 27 |
| 98. | திருவயிந்திரபுரம் | 67 |
| 99. | திருமாணிகுழி | 12 |
| 100. | நெல்லிக்குப்பம் | 38 |
| 101. | நெடும்பாக்கம் | 12 |
| 102. | பண்டைச்சோழ நல்லூர் | 12 |
| 103. | மோட்சகுளம் | 12 |
| 104. | சிறுவந்தாடு | 12 |
| 105. | திருவதிகை | 40 |
| 106. | ஆடூர் | 13 |
| 107. | திருத்துறையூர் | 26 |
| 108. | வெள்ளைமாநகர் | 13 |
| 109. | குறிஞ்சிப்பாடி | 13 |
| 110. | வள்ளியகுடி | 15 |
| 111. | விருத்தாசலம் | 24 |
| 112. | திருச்சிராப்பள்ளி | 169 |

| | | |
|---|---|---|
| 113. | திருவானைக்கா | 248 |
| 114. | திருவரங்கம் | 1190 |
| 115. | தஞ்சாவூர் | 84 |
| 116. | கருந்திட்டைகுடி | 12 |
| 117. | திருவையாறு | 44 |
| 118. | கவித்தலம் | 27 |
| 119. | திருவாவடுதுறை | 12 |
| 120. | தலைஞாயிறு | 15 |
| 121. | கருப்பறியலூர் | 12 |
| 122. | திருக்குரக்குக்கா | 15 |
| 123. | திருப்புன்கூர் | 28 |
| 124. | திருநீடூர் | 15 |
| 125. | பட்டவிருத்தி | 15 |
| 126. | மணல்மேடு | 13 |
| 127. | மண்ணிப்பள்ளம் | 15 |
| 128. | மண்ணிப்படிக்கரை | 16 |
| 129. | வாழொளிழிபுத்தூர் | 15 |
| 130. | சீர்காழி | 64 |
| 131. | வேளூர் (வைத்தீஸ்வரன் கோவில்) | 64 |
| 132. | கொண்டலம் பதி | 19 |
| 133. | சிதம்பரம் | 1333 |
| 134. | திருவிடைக்கழி | 13 |
| 135. | திருவெண்காடு | 39 |
| 136. | தருமபுரம் | 12 |
| 137. | நாகப்பட்டினம் | 25 |
| 138. | சிக்கல் | 19 |
| 139. | கீழ்வேளூர் | 12 |
| 140. | திருவாரூர் | 37 |
| 141. | திருப்புகலூர் | 220 |
| 142. | திருக்கண்ணபுரம் | 12 |
| 143. | திருச்செங் காட்டாங்குடி | 12 |
| 144. | திருமறைக்காடு (வேதவனம்) | 12 |
| 145. | பட்டுக்கோட்டை | 14 |
| 146. | திருப்பாண்டிக் கொடுமுடி | 18 |
| 147. | சென்னிமலை | 40 |
| 148. | (கொடிமாடச்) செங்குன்றூர் | 48 |
| 149. | திருச்செங்கோடு | 139 |
| 150. | சங்ககிரி | 1 |
| 151. | சேலம் | 25 |
| 152. | செவ்வாய்ப்பதி | 14 |
| 153. | திருப்பூர் | 38 |
| 154. | மாதப்பூர்மலை | 13 |
| 155. | பல்லடம் | 36 |
| 156. | பெருமான் நல்லூர் | 12 |
| 157. | திருமுருகன் பூண்டி | 48 |
| 158. | அவிநாசி | 48 |
| 159. | மேட்டுப்பாளையம் | 12 |
| 160. | மருதமலை | 27 |
| 161. | கோயமுத்தூர் | 49 |
| 162. | கதித்தமலை | 26 |
| 163. | திருப்பேரூர் | 36 |
| 164. | இறைவிமங்களம் | 12 |
| 165. | அரிமழம் | 15 |
| 166. | கானாடுகாத்தான் | 15 |
| 167. | காரைக்குடி | 65 |
| 168. | தேவகோட்டை | 269 |
| 169. | ஐவர்மலை | 12 |
| 170. | திருமூர்த்திமலை | 12 |

| | |
|---|---|
| 171. திருவாவினன்குடி | 13 |
| 172. திருக்கொழுமம் | 14 |
| 173. மதுரை | 60 |
| 174. புன்னைவனம் (கரிவலம் வந்த நல்லூர்) | 12 |
| 175. வீரகேரளம்புதூர் | 180 |
| 176. சுரண்டை | 12 |
| 177. ஆய்க்குடி | 13 |
| 178. தென்காசி | 25 |
| 179. குற்றாலம் | 36 |
| 180. திருநெல்வேலி | 1297 |
| 181. பணகுடி | 12 |
| 182. வள்ளியூர் | 27 |
| 183. நாங்குநேரி | 12 |
| 184. வாணுமா மலை | 12 |
| 185. ஆரல்வாய்மொழி | 12 |
| 186. திருவனந்தபுரம் | 202 |
| 187. பாலை நகர் (பாலக்காடு) | 16 |
| 188. கொழும்பு (இலங்கை) | 63 |
| 189. கதிர்காமம் இலங்கை) | 63 |
| 190. இறைவிமலை | 13 |
| 191. எலத்தூர் | 1 |
| 192. இளந்தோப்பு | 12 |
| 193. இலுப்பைவனம் | 12 |
| 194. கழனி நகர் | 12 |
| 195. கடக நகர் | 39 |
| 196. கபிலை நகர் | 14 |
| 197. கண்டனூர் | 8 |
| 198. கண்ணாடியூர் | 12 |
| 199. கூடலூர் | 27 |
| 200. சதுர்வேதமங்கலம் | 15 |
| 201. சாரநகர் | 13 |
| 202. சாலை நகர் | 12 |
| 203. சிகண்டீச்சுரம் | 12 |
| 204. சித்தமல்லி | 27 |
| 205. சிவதண்டீச்சரம் | 12 |
| 206. செயித்தினான் பாளையம் | 12 |
| 207. செயசிங்கநகர் | 13 |
| 208. செயநகர் | 15 |
| 209. பெருமங்கலம் | 15 |
| 210. பாறையூர் | 12 |
| 211. பிரம்மேச்சுரம் | 12 |
| 212. பொன்மாரி | 15 |
| 213. மாதவிவனம் | 13 |
| 214. வாலொழுகை | 55 |
| 215. வடுகபுரிச்செங்காடு | 12 |
| 216. வடவரளிகம் | 13 |
| 217. வடநாவல் | 15 |
| 218. விஷ்ணுபுரம் | 2 |
| 219. வில்வவனம் | 38 |
| 220. வேளூர் வயலைக்காவூர் | 2 |
| 221. திம்மையாபாளையம் | 26 |
| 222. திருகண்டீச்சுரம் | 15 |
| 223. திருக்காளத்தி | |
| 224. பாபநாசம் (நெல்லை) | |